Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Sep. 14 : 787 Nos.
  - Up to Aug. 14 : 781 Nos.
- **Performance Sep. 14 …**
  - Turnover growth : 2.23%
  - Employment growth : -1.28%
  - 100% Attendance : 12.10%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- Hydro Gen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## தங்கம்

ஆன்ட்ரூ திறமையும் துடிப்பும் மிக்க இளைஞர்! எப்படியாகிலும் முன்னேற வேண்டுமென்ற இலட்சியத்தோடு, தான் இருந்த ஸ்காட்லாந்திலிருந்து அமெரிக்காவிற்கு சென்றார்.

ஆன்ட்ரூ, அங்கே பல வேலைகளை செய்து 1920 –ம் ஆண்டில் கோடிக்கணக்கான பணத்தை அவர் சாதாரணமாக சம்பாதித்துக் கொண்டிருந்தார். அங்கே ஆன்ட்ரூவின் பெயர் மிகவும் பிரபலமானது.

ஒருமுறை பத்திரிக்கையாளர்கள் ஆன்ட்ரூவை சந்தித்து பேட்டி எடுத்தார்கள். அவருடைய கடின உழைப்பையும், விடாமுயற்சியையும் அவர் எட்டிய உயர்வையும் பற்றி கேட்டறிந்தனர். மிக நிதானமாகவும், சுவாரஸ்யமாகவும் பதிலளித்த ஆன்ட்ரூவிடம் மக்களை நிர்வகிப்பது எப்படி? நீங்கள் மக்களிடம் எப்படி நடந்து கொள்கிறீர்கள்? என்ற கேள்வி அன்றைய பேட்டியின் இறுதி கேள்வியாக முன் வைக்கப்பட்டது.

அதற்கு ஆன்ட்ரூ மக்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவது என்பது தங்கத்தைத் தோண்டி எடுப்பது போன்றது என்றார். ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்த பேட்டியாளர்களிடம் ஆன்ட்ரூ விளக்கம் கொடுத்தார்.

பல டன் கணக்கில் அழுக்குகளோடுள்ள மண்ணை தோண்டி எடுத்தால்தான் அதிலிருந்து ஒரு அவுன்ஸ் தங்கத்தையாவது பிரித்தெடுக்க முடியும். அதற்காக தங்கம் எடுக்கிற முயற்சியில் மண்ணையும் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம். அதிலிருக்கிற தங்கத்தை எதிர்பார்த்துதான் தோண்டுவோம்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தங்கம் போன்ற தன்மைகள் உண்டு. நம் வீட்டார், உறவினர், நண்பர்களிலிருக்கிற வெளியரங்கமான எதிர்மறைகள்தான் நம் கண்களில் படுகிறது. அவர்களுக்குள் மாணிக்கமாய் மறைந்து கிடக்கிற நற்குணங்கள், நற்செயல்கள், நன்மைகள் இவற்றை ஊக்குவித்தால் தங்கம்போன்ற தன்மையோடு ஒவ்வொருவரும் பிரகாசிப்பது உறுதி.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## COMPUTER

நாம் எத்தனையோ ஆண்டுகளாக COMPUTER பயன்படுத்தி வருகிறோம். ஆனால் இன்னும் சிலருக்கு COMPUTER'ன் முழு பெயர் தெரியவில்லை. அவர்களுக்காக இதை எழுதுகிறேன்.

C – Commonly
O – Operated
M – Machine
P – Particularly
U – Used for
T – Trade
E – Education and
R - Research



COMPUTER – **C**ommonly **O**perated **M**achine **P**articularly **U**sed for **T**rade **E**ducation and **R**esearch.

Compiled By : Mr. D. S. Anish
Facilitation

## FUNCTIONAL WISHES





**Muharram** 04th NOVEMBER

**Children's Day** 14th NOVEMBER

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. A. Mohan** — **10th Nov.**
Design

**Mr. B. Mathavan** — **14th Nov.**
Production

**Mrs. M. Kanagavalli** — **14th Nov.**
Marketing

**Mrs. M. Loganayagi** — **21st Nov.**
Coating

**Mr. G. Kingston Andrewspaul** — **30th Nov.**
Finance

**Mr. J. Padmanaban** — **30th Nov.**
Finance

**Best Wishes from Tiaano Employees**

## சிந்தனை துளிகள்

* தன்னம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா வாயில்களும் திறந்து வரவேற்பு அளிக்கும்.
* சோதனைதான் ஒரு மனிதனை அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றன.
* மனிதனை எந்த அளவுக்கு உயர்ந்தவனாகிறானோ! அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.
* காலத்தின் மதிப்பு உனக்கு தெரியுமானால், வாழ்வின் மதிப்பும் உனக்கு தெரியும்.

Compiled By : Mrs. S. B. Kohila
Quality Control

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

இத்தாலிய நாட்டில் ஃபிரான்ஸிஸ் என்ற பாதிரியார் ஒருவர் இருந்தார். அவர் ஒரு ஞானி, ஒருநாள் தன்னுடைய தோட்டத்தைக் கொத்தி சீர் செய்து கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக சென்று கொண்டிருந்த ஒருவர் அந்த ஞானியைப் பார்த்துக் கேட்டார், “ஐயா, இன்று மாலைக்குள் தங்களுக்கு மரணம் நேருமானால் தாங்கள் என்ன செய்வீர்கள்?”

அதற்கு அந்த ஞானி, “என் தோட்டத்தை அதற்குள் கொத்தி சீர் செய்து முடிப்பேன்” என்று அமைதியாக பதில் சொன்னார். அதாவது, நான் என் கடமையைச் செய்வேன்.

—கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலீருந்து தொகுக்கப்பட்டது

## மங்கல்யான்



சிவப்பு கோள் என்று அழைக்கப்படுகிற செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சிகள் செய்வதற்காகவும், செவ்வாயை சென்றடையும் அளவுக்கு தொழில்நுட்பத் திறன் உள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும், செவ்வாய் கிரகத்தில் மீத்தேன் இருக்கிறதா என்பன உள்ளிட்ட ஆய்வுகளை நடத்துவதுமே மங்கல்யானின் முக்கிய நோக்கங்கள்.

மங்கல்யான் என்பது செவ்வாய் கோளுக்கு இந்தியா விண்வெளி ஆய்வு மையத்தால் 2013 நவம்பர் 5 அன்று வெற்றிகரமாக பி.எஸ்.எல்.வி., சி25 ராக்கெட்டில் வைத்து ஏவப்பட்ட ஆளில்லாத விண்கலம் ஆகும். இவ்விண்கலம் 2014 செப்டம்பர் 24 வெற்றிகரமாக செவ்வாய் கிரக சுற்றுவட்டப்பாதையை அடைந்தது. இது இந்தியா செவ்வாய்க்கு அனுப்பிய முதல் விண்கலம். முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்ற உலகின் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. இத்திட்டம் இந்தியாவின் முதலாவது கோளிடைத் திட்டமாகும். சோவியத், நாசா, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றுக்கு அடுத்ததாக செவ்வாயை அடைந்த நான்காவது விண்வெளி நிறுவனம் என்ற பெருமையை இசுரோ பெற்றது.

இந்தியாவின் “பட்ஜெட்” விண்கலமான மங்கல்யான், முற்றிலும் நமது உள்நாட்டு உபகரணங்களை வைத்து தயாரித்ததில் பெருமை. மங்கல்யான் விண்கலத்தை தயாரித்தது முதல் ஏவியது வரை ஆன செலவு 454 கோடி ரூபாய். மங்கல்யான் பயணம் செய்த தூரம் 68 கோடி கி.மீ., அதாவது, மங்கல்யான் ஒரு கி.மீ., தூரம் பயணம் செய்ய ஆன செலவு சராசரியாக 6.70 ரூபாய் மட்டுமே. இது ஆட்டோ கட்டணத்தைவிட குறைவு. அவ்வளவு சிக்கனமாக நமது விஞ்ஞானிகள் இதை சாதித்துக் காட்டி உள்ளனர்.

Collected from Internet

## பயம்!!!

நெப்போலியன் தனது சிறுவயதில் ராணுவ விடுதியில் தங்கி படித்துக் கொண்டிருந்தான். அப்போது அறையில் கூடத் தங்கியிருந்த மற்றொரு மாணவன் தன்னுடைய அழகான பை ஒன்று காணாமல் போய்விட்டதாக மேலதிகாரியிடம் புகார் கூறினான். “யார் மேலாவது சந்தேகம் உண்டா?” என்றார் மேலதிகாரி. “நெப்போலியன் மேல் தான் எனக்கு சந்தேகம்” என்றான் அந்த சக மாணவன்.

## தெரிந்து கொள்வோம்

### தியானத்தால் ஏற்படும் நன்மைகள்

- அறிவுக் கூர்மை ஏற்படும்.
- மனம் உறுதி உண்டாகும்.
- மனம் ஆனந்த அமைதியில் திளைக்கும். பிரச்சனைகளை எளிதாக தீர்க்கக் கூடிய மன வலிமை ஏற்படும்.
- ஞாபக சக்தி அதிகரிக்கும்.
- நம்மை சுற்றி நல்ல அதிர்வு அலை ஏற்படும்.
- நல்ல நண்பர்களும், நல்ல சூழ்நிலைகளும் சூழும்.
- முகம் பிரகாசம் அடையும்.
- மனதிற்கு எஜமானனாகலாம்.
- நாம் சொல்வதை மனம் கேட்கும் பழக்கத்திலிருந்து விடு படக் கூடிய மன சக்தி கிட்டும்.
- மனம் அமைதி அடைவதால் பரபரப்பு குறைந்து உடல் நலத்திற்கு நன்மை விளைவிக்கும்.
- தேவையற்ற கோபம் போகும்.
- மாணவர்களுக்கு படிப்பில் விருப்பம் ஏற்படும்.
- நல்ல பழக்கங்கள் உண்டாகும்.
- மன ஒருமைப்பாடு உண்டாகும்.
- மனம் கட்டுப்பாட்டில் இருப்பதால் தேவையற்ற எண்ணங்கள் குறையும்.

ஆதலினால் தியானிப்பீர்...

Compiled By : Mrs. A. Nirmala
Finance

### KANGAROO

Kangaroo use their tails for balance so, if you lift a Kangaroo's tail off the ground, it can't hop.

Compiled By : Ms. V. Thenmozhi
Tiaano Vidyashrm

### TEACHER



**A** teacher is a…..

**T** **T**houghtful **T**hinker who is
**E** **E**xcellent at **E**ducating the
**A** **A**mazingly **A**wesome students!
**C** **C**lassrooms become a second
**H** **H**ome when teachers
**E** **E**ncourage the students to
**R** **R**each their full potential!

Compiled By : Ms. Latha
Tiaano Vidyashrm

உடனே அந்த அதிகாரி நெப்போலியனை தன்னோடு அறைக்கு அழைத்தார். நெப்போலியன் மெதுவாக மேலதிகாரியின் அறைக்குள் நுழைந்தான். மேலதிகாரி நெப்போலியனை விசாரிக்காமலேயே தனது கையில் பிரம்பை எடுத்தார். சரம் வாரியாக அடித்துத் தள்ளினார். நெப்போலியனை "ஏன் திருடினாய்? இனி இது மாதிரி தவறு செய்வாயா?" என்று கேட்டு நல்ல உதை! அவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு அமைதியாக இருந்தான் நெப்போலியன். அதற்கு பிறகு கொடுத்த தண்டனையையும் வாங்கிக் கொண்டு அமைதியாக இருந்தான். சிறிது நாட்கள் கழித்து புகார் கொடுத்த அந்த மாணவன் மேலதிகாரியிடம் ஓடி வந்தான். "ஐயா... என்னோட அந்த பையை திருடியது நெப்போலியன் அல்ல! வேறொரு மாணவன். இப்பொழுதுதான் உண்மை தெரிந்தது. தெரியாமல் நெப்போலியன் மேல் புகார் கொடுத்துவிட்டேன். மன்னித்துவிடுங்கள்!" என்றான். அந்த அதிகாரிக்கு மிகவும் ஆச்சிரியம். உடனே நெப்போலியனை அழைத்தார்.

"உனக்கு என்ன பைத்தியமா? நீ என்ன முட்டாளா? அன்று அந்த அடி அடித்தேன் அப்பொழுதே உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே என்றார்". நெப்போலியன் அமைதியாகச் சொன்னான், "ஐயா! நீங்கள் என்னை அடிப்பதற்கு முன்பாக கேட்டு இருந்தால் நான் சொல்லியிருப்பேன். அடித்துக்கொண்டே கேட்டீர்கள். அப்பொழுது நான் இல்லை என்று சொன்னாலும் அடிக்கு பயந்து நான் அப்படி சொல்வதாக நீங்கள் நினைப்பீர்கள். நான் பயந்ததாக யாரும் நினைக்கக் கூடாது! அதை விட அடி வாங்குவது எனக்கு ஆட்சேபனை இல்லை!"

சிறுவயதில் இருந்த நெப்போலியனின் அந்த பயமற்ற தைரியம் தான் பின்னாளில் மாபெரும் வெற்றி வீரனாக திகழ்ந்தது. "தான் பயந்தாகக்கூட நினைக்கப்படக்கூடாது என்று நினைத்தால்... அது அப்பேர்பட்ட மனோதிடம்".

Compiled By : Mrs. K. Shreemadhi
Administration

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி XXXIV)

#### ஒரு கப் செய்டன்

அடுத்து, ஓரமாகக் கடைச் சிப்பந்திகள் ஆக்கிரமித்திருக்கும் சிறியப் பகுதியை கவனிப்போம். இங்கேதான் காபி, டீ, சமோசா, கட்லெட், பிட்ஸா என்று எல்லாமே தயாராகிறது.

ம்ஹீம்... தயாராகிறது என்று சொல்வது தவறு. சூடாகிறது என்பது தான் சரி.

காபி பார்களில் பெரும்பாலும் சமையலறை என்று தனியாக எதுவும் இருக்காது. இருக்கிற கொஞ்சூண்டு இடத்தில் அடுப்பையெல்லாம் வைத்து சமாளிக்கமுடியாது என்பதால், பெரும்பாலான பொருள்களை ஏற்கெனவே வெளியில் தயாரித்து கொண்டுவந்துவிடுவார்கள். அதன்பிறகு, வாடிக்கையாளர்கள் எதைக் கேட்கிறார்களோ, அதை மட்டும் தனியே எடுத்து, மைக்ரோவேவ் அவனில் சூடு பண்ணிக் கொடுத்து விடுவார்கள்.

இதனால், இந்தக் கடைகளில் புதிதாகத் தயாராகிற ஒரே விஷயம் காபிதான். டீவி பெட்டியை விடக் கொஞ்சமே கொஞ்சம் பெரிதாக இருக்கிற ஓர் இயந்திரத்தில், வேண்டிய காபியைத் தயாரித்து கொடுப்பார்கள். அதனோடு கிடைக்கிற எல்லாம், ஆறிப்போய் சூடாக்கப்பட்ட உணவுப் பண்டங்கள்தான்.

## கவிதைகள்

### ALWAYS

Keep the **SMILE**,
Leave the **TENSION**,
Feel the **JOY**,
Forget the **WORRY**,
Hold the **PEACE**,
Leave the **PAIN**,
And always
**BE HAPPY**.

Compiled By : Ms. M. Abirami
Tiaano Vidyashrm (Principal)

### மழை

மனதை நனைக்கும் மழை...
மகிழ்ச்சியை கொடுக்கும் மழை...
செழுமையை வழங்கும் மழை...
செல்வதைச் சேர்க்கும் மழை...
வறட்சியை ஒழிக்கும் மழை...
வறுமையை ஒழிக்கும் மழை...
அன்பாய்ப் பெய்யணும் மழை...
அழிவில்லாமல் காக்கணும் மழை...!!!

Compiled By : Mrs. S. Sahayapani Shiny
Marketing

## புழமொழிகள்

- ☹ மின்னுவது எல்லாம் பொன்னல்ல.
- ☹ கல்விக்கு அழகு கசடற மொழிதல்.
- ☹ அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- ☹ அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
- ☹ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
- ☹ விளையும் பயிர் முளையிலே தெரியும்.

Compiled By : Master. M. Harish
Tiaano Vidyashrm (3rd Std.)

## சிந்தனைக்கு

கோபம் புயலை விட வேகமானது. அதன் சேதாரத்தை மதிப்பிட முடியாது!

**உத்வேகமளிக்கும் மந்திரம்**

“இப்போது உங்களுக்கு நல்லதாக தோன்றும் ஒன்றை பற்றிக்கொண்டிருப்பதே, இதைவிட மிகச்சிறப்பான ஒன்றை உங்களால் வழங்க இயலாததற்கான காரணமாக இருக்கக்கூடும்.”

Compiled By : Mr. K. Manivannan
Marketing(Fib Tec)

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

இவற்றையெல்லாம் விட... காபி பார்களில் நாம் கவனித்துப் பார்க்கவேண்டிய விஷயம் – அவர்கள் நாம் தருகிற ஓர் ஆர்டரை எப்படி தயார் செய்கிறார்கள். எப்படி நமக்கு பரிமாறுகிறார்கள் என்பதுதான்.

உதாரணமாக நீங்களும் நானும் காபி சாப்பிடப் போகிறோம். எனக்கு ஒரு சமோசா, உங்களுக்கு ஒரு கேக், இரண்டு கப்புச்சினோ காபி என்று ஆர்டர் செய்கிறோம். சமோசா ஏற்கெனவே தயாராக இருக்கிறது. அதைத் தூக்கி மைக்ரோவேவ் அவனில் போடவேண்டும். கேக் துண்டத்தை எடுத்துத் தட்டில் வைத்து, மேலே ஐஸ்க்ரீம் அல்லது தேனை ஊற்றவேண்டும். காபி தயாரிக்கவேண்டும்.

நமது ஆர்டர் உள்ளே சென்றதும், இந்த வேலைகள் மளமள வென்று நடக்கின்றன. அதே நேரத்தில் ஓரமாக வைக்கப்பட்டிருக்கும் பீங்கான் தட்டுகளில் இரண்டை எடுத்து, அவற்றில் டிஷ்யூ பேப்பரைப் பரப்பி,மேலே தக்காளி கெட்சப் வைக்கிறார் ஒருவர், இன்னொருவர், நமக்கு தேவையான ஸ்பூன்கள், சர்க்கரை பொட்டலங்களை எடுத்துத் தயார் செய்கிறார்.

இரண்டு காபிக் கோப்பைகளை எடுத்து, வெந்நீரில் சுத்தம் செய்து இயந்திரத்தின் அருகே தயாராக வைக்கிறார்.

இதற்குள் சமோசா சூடாகிவிடுகிறது, கேக் தயாராகிவிடுகிறது. அதையெல்லாம் அந்தந்தத் தட்டில் வைத்துக் கொண்டு வருகிறார்கள். அதே நேரத்தில் காபி இயந்திரமும் சத்தம் போடுகிறது. சுத்தமான கோப்பைகளில் நுரை பொங்கும் காபியும் கூடவே வருகிறது.

இதெல்லாம் எல்லாக் கடைகளிலும் நடக்கிற விஷயம்தானே என்று யோசிக்காமல், நம்முடைய ஆர்டரை நிறைவேற்றுவதற்கு அவர்கள் எவ்வளவு நேரம் செலவழித்தார்கள் என்பதைக் கொஞ்சம் மனக்கணக்கு போட்டுப் பாருங்கள்.

ஆர்டர் எடுக்க ஒரு நிமிஷம், காபி தயாரிக்க இரண்டு நிமிஷம், இதே நேரத்தில் சமோசா, கேக் தயாராகிவிட்டது. நமக்கு தரவேண்டிய தட்டுகள் தயார் செய்யப்பட்டுவிட்டன. எல்லாவற்றையும் நிரப்பிக் கொண்டுவருவதற்கு அரை நிமிஷம் மொத்தம் நான்கு நிமிஷத்துக்கும் குறைவு.

இந்த வேகம் எப்படி சாத்தியப்பட்டது? காபிக் கொட்டைகளில் தொடங்கி, தட்டுகள், ஸ்பூன்கள், சர்க்கரை பொட்டலங்கள் வரை எல்லாவற்றையும் அவற்றுக்குரிய இடங்களில் கச்சிதமாக வைத்திருந்ததுதானே காரணம்?

ஒருவேளை, அவர்கள் சர்க்கரையைப் பொட்டலங்களாக வைக்காமல் டப்பாவை வேறொருவர் கையோடு எடுத்துக் கொண்டு போய், இன்னொரு இடத்தில் மறந்து வைத்திருந்தால்?

தொடரும்...

### ELECTROLYZER 500 GPH

